பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 15 வெள்ளிக்கிழமை [01-11-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 332

## தமிழகத்திலிருந்து முதல் தொகுதி அகதிகள் பேசாலைக்கு வந்தனர்!

### கொழும்பு வரை விமானத்தில் பயணம்

யாழ்ப்பாணம், நவம்பர் 1

தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பும் ஈழத்தமிழ் அகதிகளில் முதல் தொகுதியினர் நேற்று மன்னார்-பேசாலைக்கு வந்து சேர்ந்தனர்.

நேற்றுக் காலை விமானம் மூலம் கட்டுநாயக்கா வந்து சேர்ந்த இவர்கள் நேற்று மாலையில் பேசாலைக்கு அழைத்து வரப்பட்டனர்,

பேசாலையில் ஐக்கிய நாடுகளின் அகதிகள் தூதரகத்தின் மேற்பார்வையில் இயங்கி வரும் அகதி முகாமில் இவர்கள் தங்க வைக்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

நேற்றுக் காலை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இந்த அகதிகள் வந்து இறங்கிய போது, அவர்களை அங்கு ஐக்கிய நாடுகளின் அகதிகள் தூதரக அதிகாரிகள் வரவேற்றுப் பொறுப்பேற்றனர்.

திரு: டெனீஸே பௌதிஸ்ஸ, திரு: பினோய் சஜபதி ஆகிய இரு அதிகாரிகளும் அகதிகளைப் பொறுப்பேற்றனர்:

இந்த அகதிகள் 17 பேரும் நேற்று மாலை பேசாலை வந்து சேர்ந்தனர் என்பதை உறுதிசெய்யக்கூடியதாக இருந்தது:

அனேகமாக கொழும்பில் இருந்து ஹெலிக்கொப்டர் மூலமே இவர்கள் மன்னாருக்கு அழைத்துவரப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. [உ-8-148]

### மூச்சந்தி முரளி



வசதி படைச்ச அகதியள் பேசாலை...... அதுதான் பிளேனிலை வந்திருக்கினம்......!

## படையினரின் கெடுபிடியால் கப்பலில் தபால் வரவில்லை

யாழ்ப்பாணம், நவ: 1

கொழும்பு துறைமுகத்தில் கடற்படையினரின் கெடுபிடி காரணமாக இந்த முறை 'குமண' கப்பலில் தபால் பொதிகள் எடுத்துவரப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கப்பலில் ஏற்றுவதற்காக துறைமுகத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட அனைத்துத் தபால் பொதிகளையும் வெட்டி சோதனை செய்ய வேண்டும் எனப் படையினர் கூறினராம்;

இதனால் ஏற்பட்ட கால தாமதம் காரணமாக தபால் பொதிகளை ஏற்றாமலேயே கப்பல் புறப்பட்டு வந்ததாக தகவலறிந்த வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

வெளியூர்த் தபால்களை எதிர்பார்த்து நேற்று யாழ். தபாலகத்துக்கு வந்த பலரும் ஏமாற்றத்துடன் திரும்பினர். [ஒ-5]

## 24 மணி நேரத்துக்குள் ராவ் திரும்பிவிடுவார்!

கொழும்பு, நவ: 1

இம்மாதம் 7ஆம் திகதி முதல் 9ஆம் திகதிவரை நடைபெறவிருக்கும் சார்க் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கொழும்பு வந்தாலும், அவர் 24 மணித்தியாலங்களுக்குள் இந்தியா திரும்பி விடுவார் என்று இலங்கை அரச வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன.

இந்தியாவில் நடைபெறும் நாடாளுமன்ற இடைத் தேர்தலை முன்னிட்டு திரு: நரசிம்மராவ் இந்தியா திரும்புவார் என்று அமைச்சரவைப் பேச்சாளரான திரு: ரணில் விக்கிரமசிங்கா நேற்று தெரிவித்தார்.

ஆனால் பாதுகாப்புக் கருதியே திரு. நரசிம்மராவ் உச்சி மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்ச்சியில் மட்டும் கலந்து கொண்டுவிட்டு இந்தியா திரும்புவார் என்று சில பத்திரிகைச் செய்திகள் தெரிவிக் [3 ஆம் பக்கம் பார்க்க]

## நரசிம்மராவ் - பிரேமா 8 ஆம் திகதி சந்திப்பர்

கொழும்பு, நவ. 1

இந்தியப் பிரதமர் திரு. வி.பி. நரசிம்மராவும், ஜனாதிபதி ஆர். பிரேமதாசவும் இம்மாதம் 8 ஆம் திகதி சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவர்.

திரு. நரசிம்மராவ் இம்மாதம் 7 ஆம் திகதி சார்க் மாநாடு ஆரம்பமாகும் தினத்தன்று கொழும்பு வருவார் அடுத்த நாளே அவர் திரும்பி விடுவார்.

இதற்கிடையில் சார்க் மாநாட்டையொட்டி, கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது;

## லலித் குழுவின் புதிய கட்சி அடுத்த வாரத்தில் உதயம்!

கொழும்பு, நவ. 1

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட அதிருப்தியாளர்கள் ஒன்று சேர்ந்து புதிய கட்சி ஒன்றை அடுத்த வாரத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பிப்பர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கட்சியை ஸ்தாபிப்பதற்கான ஏற்பாடுகளை அதிருப்திக் குழுத் தலைவர்களான - முன்னாள் அமைச்சர்கள்—லலித் அத்துலத் முதலி, காமினி திஸநாயக்கா ஆகிய இருவரும் முழு மூச்சுடன் மேற்கொண்டு வருகின்றனர்; [உ]

## பள்ளிக்குடா படையினரை புலிகள் மறித்து தாக்கு

யாழ்ப்பாணம், நவ. 1

மன்னார் மாவட்டம் பள்ளிக்குடா முகாமில் இருந்து நேற்று வெளியேறி முன்னேறி வந்த படையினரை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கினர்;

முகாமில் இருந்து 850 யார் தூரத்தில் வைத்து இந்தத் தாக்குதல் தொடுக்கப்பட்டது: அதை அடுத்து படையினர் பின்வாங்கி முகாமைச் சென்றடைந்தனர் என்றும் —

இந்த மோதலின் போது விடுதலைப்புலிகள் தரப்புக்கு சேதம் ஏதும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

## இலங்கைத் தீவிரவாதிகளுக்கு மொஸாட் பயிற்சி தரவில்லை

### விசாரணைக் குழு அறிக்கை

கொழும்பு, நவ. 1

இலங்கையைச் சேர்ந்த தீவிரவாதிகள் எவருக்கும் மொஸாட்டினரால் ஆயுதப் பயிற்சியோ வேறுவித பயிற்சியோ வழங்கப்படவில்லை.

இலங்கைப் பாதுகாப்பு அதிகாரிகள் பயிற்சி பெற்ற காலத்தில் இலங்கைத் தீவிரவாதிகளுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டதாகக் கூறப்படுவதிலும் எவ்வித உண்மையும் இல்லை;

இவ்வாறு மொஸாட் விசாரணை ஆணைக்குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"மொஸாட் அதிகாரியை ஆக்குவதும் அழிப்பதும்" என்ற நூலில் இலங்கை பற்றித் தெரிவிக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக, நீதிபதி எச். டபிள்யு: வி. வடுகொடப்பிட்டிய தனிநபர் ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்திருந்தார்.

ஆணையாளர் வடுகொடப்பிட்டியா தனது அறிக்கையை கடந்த செவ்வாய்க்கிழமை [3 ஆம் பக்கம் பார்க்க]

## பங்கீட்டு திட்ட பாதிப்புகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை

### மாத்தயா விளக்கம்

யாழ்ப்பாணம், நவ. 1

புதிய பங்கீட்டுத் திட்டத்தினால், தனியார் கடைகளில் மாதாந்தக் கடன் அடிப்படையில் பொருள்களை வாங்குவோரும் —

அன்றாடம் வைத்திருக்கும் பணத்துக்கு ஏற்பச் சிறிய அளவு பொருள்களை வாங்குவோரும்—

பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது எமக்குத் தெரியும். அவர்களின் பாதிப்பை எவ்விதம் நீக்கலாம் என்பது குறித்து ஆராய்ந்து வருகிறோம்: விரைவில் அதற்கான வழிமுறையை அறிவிப்போம்.

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு: [8 ஆம் பக்கம் பார்க்க]

## அயோத்தி பள்ளிவாசலில் இந்துக்களின் கொடி!

அயோத்தியில் சர்ச்சைக்குரிய பாப்ரி மசூதியின் மீது இந்து இளைஞர்கள் குழு ஒன்று பலவந்தமாக ஏறி அங்கு இந்துக் கொடிகளை ஏற்றியது. பின்னர் மசூதியின் ஒரு பக்கக் கட்டடச் சுவரை இரும்புக் கம்பிகளால் உடைத்தது.

நேற்றுக் காலை 10 மணியளவில் பொலீஸாரின் தடுப்பு அணியை உடைத்துக் கொண்டு பள்ளிவாசலினுள் புகுந்த இந்து தீவிரவாதிகளின் குழுவே அங்கு மூன்று கொடிகளை ஏற்றியது. அந்தக் கொடிகள் பின்னர் பொலீஸாரினால் அகற்றப்பட்டன.

17 இந்து இளைஞர் கைது செய்யப்பட்டனர் பின்னர் சற்று நே [4 ஆம் பக்கம் பார்க்க]

## வெளிமாவட்ட மாணவருக்கு உலர் உணவு 'பெர்மிட்'

யாழ். பல்கலைக்கழகம், தொழில் நுட்பக் கல்லூரி, ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றில் கல்வி பயிலும் வெளி மாவட்ட மாணவர்களுக்கு உலர் உணவு பெற 'பெர்மிட்டு கள்'' வழங்கப்படவிருக்கின்றன.

உலர் உணவு பெற விரும்பும் மாணவர் தத்தமது கல்லூரி பொறுப்பதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. [உ-3]

## கிழக்குத் தாக்குதல்கள்; புலிகளின் தந்திரோபாயம்!

### பிரிகேடியர் ஜெயவர்த்தனா கூறுகிறார்

கொழும்பு, நவ: 1

பாதுகாப்புப் படையினரின் கவனத்தை, வடக்கில் இருந்து கிழக்கிற்குத் திருப்பும் தந்திரோபாய நடவடிக்கையில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற வாராந்திர செய்தியாளர் மாநாட்டில் இராணுவத் தலைமைக் காரியாலயத்தைச் சேர்ந்த பிரிகேடியர் அசோகா ஜெயவர்த்தனா இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

படையினரின் கவனத்தை கிழக்கிற்குத் திசைதிருப்பும் தந்திரோபாய நடவடிக்கையாகவே அங்கு அம்பாறை, பொலன்னறுவை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் கடந்த 27, 29ஆம் திகதிகளில் புலிகள் தாக்குதல்களை நடத்தி இருந்தனர்.

யாழ்ப்பாணத்துக்குச் செல்வதற்கும், அங்கிருந்து வெளியேறுவதற்குமான முனைகளாவும் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதால் யாழ் குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் பெருமளவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

#### உணவுப்பொருள்

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் ராயசந்திரனால் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப் [3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

டண்—சரி பிட 5000 ஓடு சுவருடனும், நல்ல நிலையிலுள்ள மரங்களுடனும் பழைய வீடு ஒன்று உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இலட்சுமி ஸ்ரோர்ஸ், வடுக்கோட்டை. [4368]

### வினாத்தாள் [ஆண்டு 4, 5]

ஆண்டு 4, ஆண்டு 5 இற்கான புலமைப்பரிசில், பிரபல பாடசாலை அனுமதி மாதிரிப் பயிற்சிகள் [தமிழ், கணிதம், ஆங்கிலம்] பெற்றுக் கொள்ளலாம். 319, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [18418]

### சனி மாற்றம்

28 - 10 - 91 சனி மாற்றம் ரூ 7/-. தீபாவளி வெளியீடு எங்கும் விற்பனையாகின்றது. (ரகுநாதையர் வாக்கியப் பஞ்சாங்கப்படி கணிக்கப்பட்டது.) எழுதியவர்: கதிர்வேல் தமிழ் ஸ்ரோர்ஸ், முத்திரைச் சந்தையடி, நல்லூர். [18578]

### தேவை

உங்களிடம் நல்ல நிலையிலுள்ள கண்ணாடிகள் ரசம் பழுதடைந்தது இருந்தால் உடன் தொடர்பு கொள்ளவும். ஸ்ரான்லி பேணிச்சர் பலஸ், [இலங்கை வங்கி 4வது கிளை முன்பாக] ஸ்ரான்லி வீதி, [அர்ச்சுனா வீதி] யாழ்ப்பாணம். [18577]

### விடியலைத் தேடி

பரிசளிக்கக் கூடியது மீரா வெளியீடு. மீன்பாடும் தேன்நாடு என்று பெருமையோடு பேசப்படும் மட்டுநகரை படம் பிடித்துக் காட்டுவது போல, இந்நாவலை எழுதி இருக்கிறார் மட்டுநகர் குணநாதன். யாழ்ப்பாணம், கன்னாகம், சாவகச்சேரி, நெல்லியடி புத்தகசாலைகளில் விற்பனையாகின்றது. [18583]

### சோதிடம்

உங்கள் கஷ்டங்கள் பிரச்சினைகள் தீர அதிர்ஷ்டம் அழைக்கிறது. ஸ்ரீவிநாயகப் பெருமானின் அருட்சக்தி பொய்யாமொழியாக வழங்குகிறது. பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். சாதகத்துடன் வாருங்கள். ஸ்ரீசக்தி கணேச உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், (ஸ்ரீவீரமாகாளி கோவிலடி) 146, பருத்தித்துறை வீதி, நல்லூர். [18557]

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? தொழில் வெற்றி பெறுமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? உங்கள் வினாக்கள் எவையானாலும் உரிய பதில் தரப்படும். ஜாதகம், குறிப்பு எழுதவும், கைரேகை விவாகப் பொருத்தம், எண் சோதிடம் பார்ப்பதற்கும் தொடர்பு: த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 884, கோவில் வீதி, நல்லூர். [18575]

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

## A/L 93

அரசியல் — நவம்
வரலாறு — பிள்ளை

- நிர்வாகி.

(ஜ/0753)

### தவறிவிட்டது

திருமதி ம. யோசேப் ஆகிய எனது அடையாள அட்டை [377130413V] சாவகச்சேரி நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து R. யோசேப், கிளாலி வீதி, எழுதுமட்டுவாள் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது அனுப்பியோ வைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். [18585]

### ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும், பியூட்டா, 39/17, மின்சார நிலையவீதி 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (சி/0687)

### பசுப்பால்

தரமான பசுப்பால், மாலையில் வாங்க விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும். யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், சமநல சேவைகள் நிலையக் கட்டடம், மீசாலை வடக்கு. [ஜ/0868]

## அறிவித்தல்

### விவசாய பீட 1 ஆம் வருட மாணவர்களுக்கு

முதலாம் வருட இரண்டாவது அரையாண்டுக் கணித, ஆங்கில செய்முறைப் பரீட்சைகள் 1991 நவம்பர் மாதம் 11 ஆம் திகதி கிளிநொச்சி விவசாய பீடத்தில் ஆரம்பமாகும்.

ஏற்கனவே தீர்மானித்தபடி முதலாம் அரையாண்டு (மீள் பரீட்சை) 18-11-91 இல் கிளிநொச்சி விவசாய பீடத்தில் ஆரம்பமாகும்.

மேற்குறிப்பிட்ட திகதிகளில் மாணவர்கள் கிளிநொச்சி விவசாய பீடத்தில் பிரசன்னமாகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

(சி/0867)

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

## A/L 91

## Day Classes

சகல பாடங்களுக்குமான வினா-விடை வகுப்புகள்

ஆரம்பம்: 4-11-91 8-00 மணி.

## A/L 93

வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.

(ஜ-0763)

## 55 ஆம் நாள் நினைவஞ்சலி



மணலாற்றில் நடந்த நேரடி மோதலில் வீரமரணமடைந்த

### வீரவேங்கை பரிமளா (கந்தசாமி சந்திரபவானி)

விரஜனனம்: 02-05-1975 வீரமரணம்: 08-09-1991

பயம் போடும் வேளையிலும்
பைங்கிளியே உன் நினைவு
நோய் வந்து போகவில்லை
நொடிப் பொழுதில் மறைந்து விட்டாய்
அடங்காத எதிரியவன் உன்னுடலை
அழித்து விட்டான்
படுத்திருந்து கண்ட கனா
பறந்தோடி விட்டதம்மா
நீரோடும் கண்களில்
நிற்பதெல்லாம் உன்னுருவம்.

உன் இழப்பை தாங்க முடியாது துடித்து நிற்கும்:

குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்.

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(18582)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி இரதிதேவி சிவசாமி

மலர்வு: 4 - 5 - 1950 நிறைவு: 2 - 10 - 1991

எவர்மனதும் புண்படா வகையினிலே
இன்மொழியே பேசுமெம் இரதியே!
வளரும் பயிராய் உன் இரு செல்வங்கள்
மலர்ந்து வரும் இப்பிராயந்தனிலே
மனம் வந்து உன்னை அழைத்தனனே காலன்!
பண்பான உன் வார்த்தை மறக்கும் வகையறியோம்
துன்பத்தால் இங்கு யாம் துரும்பாய்த் தவிக்கின்றோம்
தெம்பு தர எழுந்து நீ வாராயோ!

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

கணவர், பிள்ளைகள், பெற்றோர், சகோதரர்கள், சகோதரி, உற்றார், உறவினர்கள்.

கல்முனை, புங்குடுதீவு.

[4365]

## இலங்கை பொறியியலாளர் சங்க யாழ். வட்டத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 1991/92

திகதி: 02 - 11 - 1991

நேரம்: காலை 9-00 மணிக்கு

இடம்: செல்வநாயகம் மண்டபம், யாழ். பல்கலைக்கழகம்.

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டுகிறோம்.

தலைவர்: பேராசிரியர் வே. நவரத்தினராசா.

செயலாளர்: சி. உருத்திரலிங்கம்.

[18568]

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

### வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள்

★ யாழ்/பல்கலைக் கழகத்துக்கான விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

★ பேராதனை/பல்கலைக் கழகத்துக்கான விரிவுரைகள்

ஆரம்பம்: 02 11 - 1991 [11 - 00 மணி.]

★ யாழ்/G. A. Q. பரீட்சைக்கு English Literature விரிவுரைகள்

ஆரம்பம்: 02 - 11 - 1991 [10 - 00 மணி.]

நிர்வாகி: S. அருள்நங்கை.

(ஜ/0760)

## வனிக்கா மெடிக்கல்ஸ்

274/2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

எமது ஸ்தாபனத்திற்கு மருந்துப் பொருட்கள் வரவுள்ளன; விற்பனை 6-11-91 இன் பின்பு ஆரம்பமாகவுள்ளது. தனியார் வைத்தியர்கள், வைத்திய சாலைகள், மருந்துச்சாலைகள் எம்மோடு குறிப்பிட்ட திகதியின் பின்பு தொடர்பு கொள்ளவும்.

— நிர்வாகம்.

[4369]

## யாழ். ஆத்திசூடி கலைமகள் சனசமூக நிலைய கலை, கலாசாரப் பேரவை வழங்கும்

நவாலியூர் சி.என். செல்லத்துரையின்

## 'கண்டியம்பதிக் காவலன்'

சரித்திர நாடகம்

02 - 11 - 1991 சனிக்கிழமை

பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும்.

இடம்: யாழ். பல்கலைக்கழக - கைலாசபதி அரங்கு.

நிர்வாகம்; ஆத்திசூடி கலைமகள் சனசமூக நிலையம்.

அன்பளிப்பு: கே. கே. இராசரத்தினம்

[18573]

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி

### சத்தியரூபா குணநாயகம்

திதி: 2-11-1991

ஆண்டு இரண்டுகள் ஆனதோ - எம்மகத்தை
ஆண்டு நிறைந்தவள் சென்றாளோ!
கண்டுக் கிளியாய் நினைவலைகள் - நித்தம்
குமையும் வேதனை உணராளோ!
மீண்டும் அவள்இங்கு பிறக்காளோ - அவளை
மீள விடாது பற்றோமோ
நாண்டு நின்றவள் போனாளோ - நம்
நாடி அடங்கிலும் மறவோமே.

தாய், கணவன், சகோதரர்கள், உறவினர்கள்,

46/2, கொழும்புத்துறை வீதி, கண்டிக்குளி.

[18581]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தீபாவளிக்கு என்ன...?

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு கூட்டுறவு மொத்த விற்பனைத் திணைக்களம் அத்தியாவசிய உணவுப் பொருள்களையும், புடைவை வகைகளையும் மலையகத்தில் தாராளமாக விநியோகிக்க ஏற்பாடுகள் செய்துள்ளது.

தீபாவளித் திருநாள் இந்துக்களின் பண்டிகை. மலையகத்தை விட, வட-கிழக்குப் பகுதியிலேயே அதிக எண்ணிக்கையான இந்துக்கள் வதிகிறார்கள்.

மலையகம் வாழ் இந்துத் தமிழ் மக்கள், தீபாவளிப் பண்டிகையை கொண்டாடுவதற்கு உதவ வேண்டும்; வசதி செய்ய வேண்டும் என்று அரசாங்கம் எண்ணியதில் தப்பில்லை. அது வரவேற்கப்பட வேண்டியதாகும்.

ஆனால், வடக்கு - கிழக்கில் வாழும் இந்துத் தமிழ் மக்கள் தீபாவளி கொண்டாட வேண்டும் என்று அரசு விரும்பவில்லை. பண்டிகை எதனையும் கொண்டாடும் நிலையில் அவர்கள் இல்லை என்பது தெரிந்தது தான், அரசு அவர்களைப்பற்றி அக்கறைப்படாமல் இருக்கிறதோ என்னவோ!

வடக்கு - கிழக்கில் அரசாங்கம் மேற்கொண்டுவரும் இராணுவநடவடிக்கைகளால், [illegible]பகுதியில் வாழும் தமிழர் [illegible] தீபாவளியை மட்டுமல்ல, [illegible]ப் பண்டிகையுமே கொண்[illegible] முடியாத நிலையில் [illegible]லப்படுகின்றனர்.

அன்றாட வாழ்க்கையைக் கழிப்பதும், உயிர்ப் பாதுகாப்புடன் வாழ்வதும் கஷ்டமாகவும், சந்தேகமாகவும் இருக்கும் போது, வட-கிழக்குத் தமிழர்கள் பண்டிகை கொண்டாடுவது எப்படி? வாழ்வா, சாவா என்று துவண்டு கொண்டிருக்கும் வேளையில், பண்டிகைகளும் கொண்டாட்டங்களும் ஒரு கேடா என்ற கேள்வியே தமிழர் மனங்களில் ஓங்கி, உயர்ந்து ஒலிக்கிறது!

லட்சக்கணக்கான தமிழ் மக்கள் தங்கள் உறவினர்களையும், உடைமைகளையும் இழந்து, அகதி முகாம்களில் வாழ்கிறார்கள். அவர்களுக்குப் போதிய உணவு, மருத்துவ வசதிகளைச் செய்வதற்கு சிறப்பான ஏற்பாடுகள் இல்லை.

இடம்பெயராமல் தங்கள் சொந்த வீடுகளில் வசிக்கும் சிறு அதிர்ஷ்டம் உடையவர்களுக்கு, அத்தியாவசிய உணவு பொருள்கள் தானும் கிடைப்பதில்லை. எல்லாவற்றுக்கும் தட்டுப்பாடு, கட்டுப்பாடு.

இந்த நிலையில் வடக்கு-கிழக்குத் தமிழர்கள் எந்த மனதுடன் தீபாவளியைக் கொண்டாடுவது? கொண்டாட நினைப்பது?

வடக்கு-கிழக்குத் தமிழர்கள் அரசாங்கம் பண்டிகை கொண்டாட வசதி செய்யுமாறு கோரவில்லை. தாம் நிம்மதியாகவும், பாதுகாப்பாகவும் வாழ்வதற்கு முதலில் இராணுவ நடவடிக்கைகளை அடக்குமுறைகளை நிறுத்த வேண்டும் என்றே கேட்கிறார்கள். அதன் பின்னர் பேச்சுவார்த்தைகள் மூலம் தமது நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

இத்தமிழர்களுக்கென்று தனியான அரசாங்கம் அமைந்தால், அவர்கள் அகதிகளாகவும், அன்றாட வாழ்க்கையை நடத்த முடியாமலும் அவதிப்பட வேண்டியதில்லை. எனவே அரசாங்கம் எதிர்வரும் தீபாவளியுடனாவது வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வில் நாட்டம் கொள்ளுமா? அவ்வாறு செய்வதுவே வடக்கு-கிழக்குத் தமிழர்களுக்கு தீபாவளிக்குரிய உண்மைப் பரிசாக அமையும்!

## ஓய்வூதிய வவுச்சரும் வந்து சேரவில்லை

யாழ்ப்பாணம், நவ. 1

அக்டோபர் மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் "குமண" கப்பலில் எடுத்து வரப்படவில்லை.

ஓய்வூதிய வவுச்சர்களை செலவு [illegible] வேலை தயாரிக்கும் முயற்சிக்கு காகிதாதிகள் தட்டுப்பாடு தடையாக இருப்பதால் அடுத்து வரவுள்ள கப்பலில் வந்த வவுச்சர்களை அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு யாழ். அரச அதிபர் கொழும்பில் தங்கி நிற்கும் யாழ். செயலக அதிகாரி ஒருவருக்குத் தகவல் அனுப்பியுள்ளார். (ஓ-5)

## கொழும்பு செல்லும் நோயாளர்கள் பதிவு செய்யுமாறு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ. 1

கொழும்பில் சிகிச்சை பெறுவதற்காக செல்ல சிபார்சு செய்யப்பட்ட நோயாளர்கள் எதிர்வரும் புதன்கிழமை (6 ஆம் திகதி) காலை யாழ். ஆஸ்பத்திரிக்கு சமுகம் தந்து கப்பலில் செல்வதற்காக தமது பெயர், விவரங்களை பதிவு செய்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

நோயாளரோ அல்லது நோயாளரின் நெருங்கிய உறவினரோ தகுந்த ஆவணங்களுடன் வந்து பதிவு செய்துகொள்ளலாம் எனவும்—

அவசியமான நோயாளர்களுக்கு மாத்திரமே உதவியாளர்கள் அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-15)

## மின்சார ஊழியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 1

இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய ஊழியர்கள் சகலரும் பங்குபற்றும் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் யாழ். பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தில் நடக்கும் இக் கலந்துரையாடலுக்கு சகல தர ஊழியர்களும் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஏ)

## மூன்று ஈழத் தமிழர்கள் தப்பினர்

சென்னை, நவ. 1

மதுராந்தகம் சிறைச்சாலையில் இருந்து மேலும் மூன்று ஈழத்தமிழர்கள் தப்பி ஓடிவிட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

சிறைச்சாலைச் சுவர் ஏறி அவர்கள் தப்பிச் சென்றுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

முன்னரும் மூன்று ஈழத்தமிழர்கள் மதுராந்தகம் சிறையிலிருந்து தப்பிச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

## ஜி. சீ. ஈ. பரீட்சை பற்றி பேச பணிப்பாளர் கொழும்பு செல்வார்

யாழ்ப்பாணம், நவ. 1

எதிர்வரும் டிசம்பர் 9 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சையை நடத்துவது தொடர்பாக கொழும்பில் பேச்சு நடத்த வட பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் விரைவில் கொழும்பு செல்லவுள்ளார்.

பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்துள்ள "குமண" கப்பல் மூலம் தாம் கொழும்பு செல்வதற்கான அனுமதியைப் பெற்றுத் தருமாறு பரீட்சை ஆணையாளர் திரு. ஆர். பெதமுல்லவிடம் அவர் கேட்டுள்ளார். (ஓ-5)

## 4 இந்திய மீனவரைக் காணவில்லை

சென்னை, நவ. 1

நாகபட்டினம் அருகே அக்கரைப்பேட்டையில் இருந்து கடலில் மீன்பிடிக்கச் சென்ற நான்கு மீனவர்கள் கடந்த சனிக்கிழமையிலிருந்து காணவில்லை என்று கூறப்படுகிறது.

காணமற்போனவர்களைத் தேடும் பணியில் இந்தியக் கடற்படையின் 13 படகுகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## இடம்பெயர்ந்த தீவுப்பகுதி மக்களுக்கு உணவு முத்திரைக்குப் பொருள்கள்

யாழ்ப்பாணம், நவ. 1

தீவுப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் தஞ்சமடைந்துள்ளோரின் உணவு முத்திரைக்குப் பொருள்கள் வழங்கப்படவிருக்கின்றன.

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் உள்ள புங்குடுதீவு, நயினாதீவு பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்துள்ளோரது முதலிய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு இது [illegible] நயினாதீவு பல நேர்க்கும் கூட்டுறவுச் சங்கத்தில் [illegible].

உணவு முத்திரைகள் வெட்டப்பட்ட பெறுமதி குறிக்கப்பட்டு, அவ்வுடன் உரியவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கான பொருள்கள் அடுத்தவாரம் விநியோகம் செய்யப்பட இருப்பதாக அறியவருகிறது. (ஓ-131)

## சுன்னாகத்தில் தமிழீழ ஆரம்ப நீதிமன்று

யாழ்ப்பாணம், நவ. 1

சுன்னாகத்தில் வலிகாமம் பிரிவு தமிழீழ ஆரம்ப நீதிமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் [illegible] மாவட்ட அரசியல் [illegible] நீதிமன்றத்தை ஆரம்பித்து வைத்தார்.

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 1

சங்கானை வைப்பிரசசமாசவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும் ஆசிரியர் தினமும் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

அதிபர் திரு. கா. சந்திரபாலன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக சமயப் பணிப்பாளர் திரு. ப. சண்முகராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

திரு. க. மகேசன், திருமதி ம. லோகநாதன், திரு. க. சரவணபவன் தம்பதிகள், திருமதி பொ. சண்முகம், திரு. த. ஜீவரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (ஏ)

## தமிழ்த்தாய் மன்ற பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 1

தமிழ்த்தாய் மன்றத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் இன்று மாலை 4 மணிக்கு, நல்லூர் வடக்கிலுள்ள மன்ற நூலகத்தில் நடைபெறும். (ஏ)

## ரயில் விபத்தில் 29 பேர் பலி

புதுடில்லி, நவ. 1

கர்நாடகத்தின் தலைநகரான பெங்களூரில் இருந்து 60 கிலோ மீற்றர் தொலைவில் இடம்பெற்ற ரயில் விபத்தில் 29 பயணிகள் கொல்லப்பட்டனர்.

பாலம் ஒன்றுடன் ரயில் மோதியபோது 13 பெட்டிகள் தடம்புரண்டன என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

## தமிழ்நாட்டில் வெள்ளத்துக்கு 38 பேர் பலி

சென்னை, நவ. 1

கடந்த மூன்று தினங்களாக தமிழ்நாட்டில் பெய்துவரும் மழை காரணமாக இறந்தோர் எண்ணிக்கை 38 ஆக அதிகரித்துள்ளது. இறந்தவர்களில் 14 பேர் குழந்தைகள் என்று தெரிவிக்கப்படுகிறது. வெள்ளத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள தர்மபுரி மாவட்டத்தில் மட்டும் 18 பேர் இறந்துள்ளனர். (இ-த)

## சைக்கிள் தடை நீக்க கோரிக்கை

கொழும்பு, நவ. 1

வட பகுதிக்கு சைக்கிள் கொண்டுவர இருந்துவரும் தடையை நீக்குமாறு கல்வி ராஜாங்க அமைச்சர் திருமதி ராஜமனோகரி புலேந்திரன் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் ஜெனரல் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவை நேற்று சந்திக்க ஏற்பாடாகி இருந்தது. (இ-த)

## கிழக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படும் உணவுவகைகள் மற்றும் மருந்து வகைகள் ஆகியவற்றை அதிகரிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருள்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்படும்.

பொருள்களைக் கப்பலில் இருந்து இறக்குவதற்கு காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறை துறைமுகங்களில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆனையிறவுப் பாதை

ஆனையிறவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான வீதி தற்போழுது பொதுமக்களின் வாகனங்களினதும் உபயோகத்திற்குத் திறந்துவிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுவதற்கு யாழ்ப்பாணம் மக்களுக்குத் தேவையான [illegible] (ஓ-எ)

# இன விகிதாசார அடிப்படையில் 292 பேருக்கு இன்று நியமனம்

கொழும்பு, நவ. 1

இன விகிதாசார அடிப்படையில், போட்டிப் பரீட்சை மூலம் தெரிவான 292 பேருக்கு இன்று முதலாம் திகதி தொடக்கம் திணைக்களங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும், வங்கிகளிலும் நியமனம் வழங்கப்படவிருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இவர்களில் 225 பேர் சிங்களவர்கள் என்றும், 40 பேர் தமிழர்கள் என்றும், 25 பேர் முஸ்லிம்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-த)

## கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கு வடக்கு - கிழக்கில் அதிக வெற்றிடம்

கொழும்பு, நவ. 1

கணித, விஞ்ஞான ஆசிரிய பரீட்சைக்கான வெற்றிடங்கள் வடக்கு - கிழக்கு மாகாணம், ஊவா மாகாணம், வடமத்திய மாகாணம் ஆகியவற்றிலேயே அதிக அளவில் உள்ளன.

சுவிச் சேவைக்குழு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் தாம் வசிக்கும் மாகாணத்தை விட வேறு மாகாணங்களில் நியமனம் பெற விரும்பினால் அதற்கு விண்ணப்பிக்க முடியும்.

போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் மாகாண அரச சேவையில் கீழ் நியமனங்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணித, விஞ்ஞான பயிலுனர் ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளது தெரிந்ததே. (இ-த)

## எழுவைதீவிலுள்ள மக்கள் ஒன்றுகூடிப் பேசவும் தடை!

யாழ்ப்பாணம், நவ. 1

எழுவைதீவில் இருக்கும் மக்கள் இராணுவத்தினரின் துன்புறுத்தல்களுக்கு ஆளாகி வருவதாகவும், அங்குள்ள மக்கள் ஒருவரோடு ஒருவர் பேசுவதற்கும் கூட படையினர் தடை விதித்துள்ளனர் என்றும் அறியவருகிறது.

மக்கள் வைத்திய வசதி ஏதுமின்றி பெரும் துயர் அடைந்துள்ள அதே சமயம் தொற்று நோய்களுக்கு இலக்காகும் ஆபத்தை எதிர்நோக்கி இருக்கின்றனர் என்றும்—

நேவியாற்றப்பட்டவர்கள் முகாம்களில் இருந்து வெளியேற முடியாத நிலையில் அவதியுறுகின்றனர் என்றும்—

அங்குள்ள மக்கள் இரவில் விளக்கு எரிப்பதற்கும் கூட படையினர் அனுமதி மறுத்துள்ளனர் என்றும் தெரிய வருகிறது. (ஏ)

## இலங்கை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி பிரேமதாசாவிடம் சமர்ப்பித்திருந்தார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் ஏனைய முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ ஸ்ரீலங்காவில் தேசிய புலனாய்வு பாதுகாப்பு அமைப்பு ஒன்று நிறுவப்பட வேண்டும். தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு பிரயாணக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் அபிவிருத்தி செய்யப்படவேண்டும்.

★ ஏற்கனவே பயன்படுத்திய ஆயுதங்களை இலங்கை பாதுகாப்புப் படையினர் பாவிப்பதைக் கொள்வனவு செய்யும் முறைமை கைவிடவேண்டும்.

★ இலங்கை மகாவலி அதிகார சபைக்கும் இஸ்ரவேல் விசேஷ அமைச்சுக்கும் இடையில் விவசாயக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இரு இஸ்ரவேலர்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

★ இது இஸ்ரவேலர்கள் தாமிருந்த சாத்தியக்கூறு அறிக்கை மகாவலி 'B' வலயத்தில் அமைக்கப்பட இருந்த பாதுகாப்புப் பண்ணை சம்பந்தப்பட்டதாகவே இருந்தது.

★ இது ஒருபோலி அறிக்கை அல்ல, இலங்கை விவசாய—பொருளாதார நிபுணர் ஒருவரும் இணைந்து தயாரித்த உண்மையான அறிக்கை இது.

★ உலக வங்கியின் நம்பிக்கையைப் பெறுவதற்காக இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது என்பது பொய்யாகும்.

★ துரித மகாவலித் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட நிதி உதவி இஸ்ரவேலிடம் இருந்து இலங்கை சொல்லவு செய்த ஆயுதத்துக்கு மொசாட் நிறுவனத்தினாலேயே அல்லது வேறு எவராலேயோ பயன்படுத்தப்படவில்லை. (இ-த)

## பங்கீட்டு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோ. மகேந்திரராசா (மாநகரா).

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உணவு விநியோகத்தை சீராக்கும் பொருட்டு எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து அவர் நேற்று மாலை செய்தியாளர்களுக்கு விளக்கினார்.

அந்தக் கலந்துரையாடலில் திரு. மகேந்திரராசா தெரிவித்த ஏனைய முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ சாதாரண காலகட்டத்தில் குறிப்பிட்ட தொகையினரே வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்தனர். ஆனால் இன்று ஸ்ரீலங்கா அரசின் பொருளாதாரத் தடை, எரிபொருள் தடை, போக்குவரத்துத் தடை ஆகியவற்றின் காரணமாக பெரும்பான்மையான மக்கள் வறுமையில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு உணவுப் பொருள் நிவாரணம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே புதிய பங்கீட்டுத் திட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

★ விலை ஏற்றம், பதுக்கல் காரணமாக பொருள்களை கொள்வனவு செய்யமுடியாத நிலை ஏற்படக்கூடாது என்பதனால், இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

★ உதவி அரச அதிபர் மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள பரவலாக்கப்பாட்டு பாதுகாப்புக் குழு, சகலருக்கும் உணவு கிடைக்க சேவையாற்றும். மக்கள் தனலுக்கான செலுத்தும் [illegible] ஆதாரம் வழங்கவேண்டும். தங்கள் பிரச்சினைகளை அக்குழுவிடம் தெரிவிக்கலாம்.

★ யாழ். செயலகத்தின் களஞ்சியத்தில் இருக்கும் உணவுப் பொருள்கள் தற்சமயம் மக்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் அவசியப்படும் முடிவுகளை நடத்துவது தனியார் வர்த்தகர்களின் கையிருப்பில் உள்ள உணவுப் பொருள்கள் பங்கீட்டுக்கு வழங்கப்படும்.

## 24 மணி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கின்றன.

கொழும்பில் தங்கி நிற்கும் போது திரு. நரசிம்மராவ் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் மற்றும் இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா ஆகியோருடன் பேச்சுகள் நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நகைத் தொழிலுக்குரிய

டை மெஷின்: அதற்குரிய அச்சு வகை
(மாலை அச்சு, குளிகை அச்சு, பென்ரன் அச்சு, விரார் தோட்டு அச்சு, காப்பு அச்சு)

எம்போசிங் மெஷின்: அதற்குரிய அச்சு வகை
[சுவாமி பென்ரன் வகை]

கட்டிங் மெஷின்:
3 ½ அடி திண்டுக்கல் பெட்டி
இங்கிலிஷ் பெட்டி:

உடனடியாக விற்பனைக்குண்டு.

**மு.த. பாலகிருஷ்ணர் பத்தர்,**
இல. 86, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(18564)



## வெளிவாரிப் பட்டப் படிப்புகள் கல்வியாண்டு 1992/93

பேராதனை/யாழ். பல்கலைக் கழகங்களின் பட்டப் பாட நெறிகளான

★ கலை முதற்தேர்வு G. A. Q.
★ வர்த்தக முதற்தேர்வு [First in Commerce]
★ விஞ்ஞான முதற்தேர்வு G. S. Q.

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
அல்லது
பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி:- 31-10-1991

● விரிவுரைகள்
2-11-1991 இல் ஆரம்பமாகின்றன.

விவரங்களுக்கு:
உதவிப் பதிவாளர்
**பட்டப் படிப்புகள் கல்லூரி,**
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு:- விஞ்ஞானம், வர்த்தகம், கணிதம் பிரிவு மாணவர்கள் கலை முதற்தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம் என்பதை அறியத் தருகின்றோம்.

[சி/0865]



## A|L - 93

சனி, ஞாயிறு

| | | | |
|---|---|---|---|
| 8-00 | PHYSICS | — | திரு. அருள்தாஸ் |
| 9-00 | CHEMISTRY | — | திரு. மகாதேவா |
| 10-00 | BOTANY | — | திரு. ஸ்ரீகரன் |
| 10 00 | PURE MATHS | — | திரு. லக்ஷ்மன் |
| 11-00 | ZOOLOGY | — | திரு. K. சிவபாதம் |
| 11-00 | APP. MATHS | — | திரு. லக்ஷ்மன் |
| 1-00 | PHYSICS | — | திரு. ரவீந்திரநாதன் |
| 2-00 | CHEMISTRY | — | திரு. D S சோதி |
| 3-00 | BOTANY | — | திரு. சதீஸ் |
| 3-00 | PURE MATHS | — | திரு. மகேஸ்வரன் |
| 4 00 | ZOOLOGY | — | திரு. விக்னேஸ்வரன் |
| 4 00 | APP. MATHS | — | திரு. மகேஸ்வரன் |

ஆரம்பம்: 02 - 11 - 1991

**BOND INSTITUTES**
58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[4372]



நிம்

இல்லத்தரசிகள்
இதயத்திற்கு
இதமான செய்தி!

மற்றுமோர் மில்க்வைற் தயாரிப்பு:
உங்கள் பாத்திரங்கள் எவர்சில்வர், பித்தளை, பிளாஸ்ரிக், கண்ணாடி எதுவானாலும் பளிச்சென்று துலக்கிட,

"நிம்"

வேலைச் சிரமமில்லை.
மில்க்வைற் "நிம்"
(சி/0866)


# மத்திய கிழக்கு மாநாடு முறுகலான கட்டத்தில்

மாட்ரிட், நவ. 1

மத்திய கிழக்கு சமாதான மாநாட்டில் பங்குபற்றிய இருதரப்பாரும், பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்று வலியுறுத்தினர் எனினும், நேற்றைய நிகழ்வுகள் முரண்பட்ட நிலையில், முறுகலான கட்டத்தை அடைந்திருந்தது.

மாநாட்டின் இரண்டாம் நாளான நேற்று இஸ்ரவேல் பிரதமர் யிற்ஷாக் ஷாமிர் 30 நிமிடங்கள் உரையாற்றினர்

இஸ்ரவேல் கைப்பற்றியுள்ள பிரதேசங்கள்பற்றி மட்டுமே இம்மாநாட்டில் பேசப்படுமானால், மாநாடு மேலும் தொடராது ஸ்தம்பிதநிலைக்குள்ளாகும் என்று அவர் கடும் தொனியில் எச்சரித்தார்.

மத்திய கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வாக கைப்பற்றப்பட்ட பிரதேசங்கள் மீண்டும் பலஸ்தீனியரிடம் ஒப்படைப்பதில் இணக்கம் காணப்படாதவிடத்து, அது பேரழிவையே எதிர்காலத்தில் ஏற்படுத்தும் என்று ஜோர்தான் வெளியுறவு அமைச்சர் பதிலுக்கு முழங்கினார்.

இத்தகைய சூழ்நிலையில் நேற்றைய நிகழ்ச்சிகள் முறுகலான கட்டத்தை அடைந்திருந்தன.

இதேவேளை சமாதான மாநாட்டை ஆட்சேபித்து லெபனான் தலைநகரான பெய்ரூத்தில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். முன்னாள் அமெரிக்கத் தூதரகக் கட்டடத்தின் முன் டயர்களைப் போட்டுக் கொளுத்தி மக்கள் தமது எதிர்ப்பைக் காட்டினர்.

லிபியாவிலும் இதேபோல பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடந்தது.
(அ-எ)

# சில ப. நோ. கூ. ச. கிளைகள் இரவு 8 மணிவரை இயங்கும்

யாழ்ப்பாணம், நவ. 1

அன்றாடம் உழைத்துச் சம்பாதிப்போர் உலர் உணவு கொள்வனவு செய்ய வசதியாக கிராமத்துக்கு ஒரு ப. நோ. கூ. சங்க கிளை இரவு எட்டு மணிவரை திறந்து வைக்கப்படும்.

இரவு நேரத்தில் உலர் உணவைக் கொள்வனவு செய்ய வசதியாக கிராமத்துக்கு ஒரு கிளை காலை 10 மணிக்கு திறந்து இரவு எட்டு மணிக்கு மூடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(உ-3)


கலை, வர்த்தகக் கல்லூரி
**C. C. A.**
யாழ்ப்பாணம்.
DAY CLASSES
**G.C.E. A/L 92**
ஆரம்பம்: 06-11-1991
காலை 8 00
குறிப்பு:- பாடசாலை செல்லாத மாணவர்களே அனுமதிக்கப் படுவர்.
முழுப்பாடத் திட்டமும் முடிக்கப்படும்.
**G.C.E. A/L 93**
ஆரம்பம்: 02-11-1991
காலை 8.00
[சி 0750]


## அயோத்தி..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கழித்து, மீண்டும் ஆர்ப்பாட்டம் செய்தபடி வந்த ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பள்ளிவாசல் பகுதியில் வன்முறையில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் அதிகாரிகள், அப்பகுதி நீதிவான் ஆகியோர் பார்த்திருக்க சில இளைஞர்கள் சுமார் 10 நிமிட நேரம் பள்ளிவாசல் சுவரை இரும்புக் கம்பிகளால் உடைத்தனர்.

அப் பகுதிக்கு விரைந்து வந்த பாரதீய ஜனதாக் கட்சிப் பிரமுகர்களினால் அவர்கள் பின்னர் கட்டுப் படுத்தப்பட்டனர்.

இந்தத் தாக்குதலினால் பள்ளிவாசல் சுவர் பல இடங்களில் சேதமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.


## வைத்திய சேவை

மாதர் முறிவு—நெரிவு
வைத்திய நிலையத்தின்
கிளை ஸ்தாபனம் வேறெங்கும் கிடையாது.
நேரடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
அருள் மாதர் வைத்திய நிலையம்
45, சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்-
(C/0869)



## வைத்திய சேவை

வாடிக்கையாளர்களே!
மாதர் முறிவு - நெரிவு
வைத்திய நியைம்
தொடர்ந்தும் பழைய இடத்திலேயே
இயங்கி வருகிறது!
அருள் மாதர் வைத்திய நிலையம்
45, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்,
(C/0870)


# புங்குடுதீவில் 300 பேர் படையினரிடம் சிக்கினர்

யாழ்ப்பாணம், நவ. 1

புங்குடுதீவுப் பகுதியில் சுமார் 300 பேர் வரையானோர் இராணுவத்தினரிடம் சிக்கி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அங்கிருந்து இடம்பெயர்ந்து வந்துள்ளவர்களின் தகவல்களில் இருந்து இது தெரிய வந்துள்ளது.

வயோதிபர்களும், நோயாளர்களுமே பெரும்பாலும் அங்கு சிக்கியுள்ளனர். அவர்களை மீட்கும் முயற்சியாக அவர்களது உறவினர், சம்பந்தப்பட்டவர்களின் பெயர், விபரங்களை செஞ்சிலுவைச் சங்கத்தில் பதிவு செய்து வருகின்றனர்.
[ஒ-131]

## மீண்டும் தேங்காய் எண்ணெய்

யாழ்ப்பாணம், நவ. 1

கடந்த சில தினங்களாக மறைந்துபோன தேங்காய் எண்ணெய் நேற்று மீண்டும் கடைகளிலும், சந்தைகளிலும் காணப்பட்டது.

தேங்காய் எண்ணெய் அத்தியாவசிய உணவுப்பொருள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டதைத் தொடர்ந்தே மீண்டும் அது கடைகளில் தலைகாட்டியது.

எனினும் கடைக்குக் கடை வெவ்வேறு விலைகளுக்கு விற்கப்பட்டன.
[அ-131]

# சில தமிழ் மாவட்டங்களின் அபிவிருத்திக்குத் துரித திட்டம்

கொழும்பு, நவ. 1

வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு அரசு விசேட திட்டங்களை வகுத்துள்ளது.

அத்திட்டங்களை அமுல்படுத்தும் பொறுப்பு மூன்று அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட அபிவிருத்தி அமைச்சர் பி. தயாரத்தினாவிடமும், திருமலை அபிவிருத்தி அமைச்சர் சிறிசேன கூரேயிடமும், மட்டக்களப்பு அபிவிருத்தி அமைச்சர் மன்சூரிடமும் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

ஒரு வருட கால துரித அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் மேற்கண்ட மாவட்டங்களுக்கு பல வசதிகளும் செய்யப்படும்.
[அ]

## கலைப்பீட வகுப்புகள்

யாழ்ப்பாணம், நவ. 1

1990 – 91 கல்வி ஆண்டுக்கான வகுப்புகள் சகல கலைப்பீட மாணவருக்கும் இம் மாதம் 4 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளன.

கலை, வர்த்தக, முகாமைத்துவ, நுண்கலை, சித்த வைத்திய (முதலாம் வருடம் தவிர்த்து) துறைகளுக்குமான போதனைகள் அன்று ஆரம்பமாகும் என்று கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.
[அ]

## உணவுப் பொருள் கையிருப்பை நாளைக்கு முன்னர் ஒப்படைக்குக!

யாழ்ப்பாணம், நவ. 1

நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவில் உள்ளவர்கள் தமது தேவைக்கு மேற்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருள் கையிருப்புப் பற்றிய பட்டியலை நாளை நண்பகல் 12 மணிக்கு முன்னர் நல்லூர் உ.அ.அ. அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கோரப்படுகின்றனர்.

வர்த்தகர்கள் உட்பட அனைவரும் தமது பட்டியலை ஒப்படைத்துவிடுமாறு நல்லூர் உதவி அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஒ)


## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா நடராஜா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாக கொண்ட திருமதி இராசம்மா நடராஜா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜாவின் அன்பு மனைவியும், தங்கராஜா [பிராந்திய முகாமையாளர், இலங்கை வங்கி], தங்கலக்ஷ்மி, தனலக்ஷ்மி, யோகமலர், தவபாலன் [ஜேர்மனி] ஆகியோரின் அருமைத் தாயாரும், நீனா, காலஞ்சென்ற செல்வராசா, பாலச்சந்திரன், தருமபவன், வேணி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [1-11-1991] வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இலக்கம் 57, புகையிரத வீதி, கச்சேரி கிழக்கில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
இல 57, புகையிரத வீதி, த. சதீசன்
கச்சேரி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
(18423)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், [illegible] வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 1-11-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org